வடசென்னை பெரம்பூரில் 40 ஆண்டுகளாக அஞ்சலி நாட்டியாலயா பள்ளியை நடத்தி வரும் முனைவர் எஸ்.ஆர். ரவிசந்திரனுக்கு 'ஆச்சார்ய கலா சாகர' விருதை நல்லி குப்புசாமி செட்டியார் வழங்கினார். பத்மா ராகுலன், அவரது கணவர் நாதன் ராகுலன், டாக்டர் அம்பிகா காமேஷ்வர், பாட்டும் பரதமும் ராம்கி, மக்கள்குரல் ராம்ஜீ உடன் இருக்கிறார்கள்.

லண்டனில் உள்ள கிரிப்பித் கல்லூரி சார்பில்

30 ஆண்டு கலைத்துறை சாதனைக்காக 25 மூத்த கலைஞர்களுக்கு 'ஆச்சார்யா கலாசாகரா' விருது: நல்லி குப்புசாமி செட்டி வழங்கினார்

இளம் கலைஞர்களுக்கு நாட்டிய கலா விபாஞ்சி விருது

சென்னை, ஜூலை 30

லண்டனில் தலைவர் பத்மா ராகுலன், நிர்வாக இயக்குனர் நாதன் ராகுலன் தம்பதி தலைமையில் வெற்றிகரமாக இயங்கி வரும் கிரிப்பித் கல்லூரி (இன்டர்நேஷனல் எக்ஸாமினேஷன் போர்டு) சென்னை கிளையின் அதிகாரப்பூர்வமான அறிமுக விழா மயிலை பி.எஸ். உயர்நிலைப் பள்ளியில் உள்ள தட்சிணாமூர்த்தி கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டி, தன் ராசிக் கரங்களால் துவக்கி வைத்தார்.

இந்திய நடனம், குரலிசை மற்றும் வாத்தியக் கலைக்களுக்கான சர்வதேச தரச்சான்றுத் தேர்வு திட்டம் இந்தியாவில் அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி இது.

பத்மபூஷண் டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார், கலைமாமணி டாக்டர் அம்பிகா காமேஸ்வர், கலைமாமணி மக்கள்குரல் வி. ராம்ஜீ ஆகியோர் துவக்கி வைத்து வாழ்த்துரைத்தார்கள். கிரிஃபின் கல்லூரி தலைவர் டாக்டர் பத்மா ராகுலன் வரவேற்றார். நிர்வாக

சென்னை கே.கே.நகரில் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்ரீ வர்னிகா கலாலயா நாட்டியப் பள்ளியை வெற்றிகரமாக நடத்தி வரும் சம்யுக்தா வரதராஜனுக்கான (இவர் இப்போது லண்டனில் முகாமிட்டு இருக்கிறார்) 'ஆச்சார்ய கலா சாகர' விருதை அவரது சகோதரர் ராம்நாத் பெற்றுக் கொண்டார்.

இயக்குநர் ஸ்ரீ நாதன் ராகுலன் நன்றி கூறினார். இவ்விழாவின் முக்கிய சிறப்பாக, 30 வருடங்களுக்கு மேல் கலைத்துறையில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்ட 25 பேருக்கு, ஆச்சார்ய கலாசாகர விருது என்ற வாழ்நாள் சாதனையாளர் விருது தவிர,

''நிருத்ய ரத்னாகாரா விதுஷி, காந்தர்வ கலா ரத்ன வித்வான், சங்கீத கலைமணி, வாத்திய ரத்னா, நிருத்திய சிரோமணி, நாட்டிய கலா விபாஞ்சி, குளோபல் சைல்ட் பிராடிஜி, சமாஜ சேவா புரஸ்கார், கலா சாரதி ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டன.

லண்டன், அமெரிக்கா

விழாவில் இந்தியா, இலங்கை, லண்டன், அமெரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, கனடா மற்றும் பிற நாடுகளிலிருந்து வந்த கலைஞர்கள் மற்றும் கௌரவ விருந்தினர்கள் பங்கேற்றனர்.

கலை, கல்வி மற்றும் சமூக சேவையை ஊக்குவிக்கும் நோக்குடன், கிரிஃபின் கல்லூரி நடத்திய இந்த விழா, உலகளாவிய கலை மேடையாக திகழ்ந்தது என்று இந்த அமைப்புக்கு சென்னையில் இணைக்கும் பாலமாகவும், பலமாகவும் இருக்கும் நாட்டியக் கலைஞரும், ஸ்ரீசாய் நிருத்யாலயாவின் நிறுவனருமான நந்தினி சுரேஷ் பெருமிதத்தோடு கூறினார்.

நிகழ்ச்சியை அழகு தமிழில் தொகுத்து வழங்கினார் நாடகாசிரியர் கலைமாமணி சந்திரமோகன்., 'பாட்டும் பரதமும்' ஆசிரியர் ராம்கி ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் சிறப்பு ஆராதனை

நீலாங்கரை ஆர்.கே. கன்வென்ஷன் சென்டரில் ஆகஸ்ட் 1 முதல் 3ந் தேதி வரை 'தூய வணக்கம்' சிறப்பு மாநாடு

சென்னை, ஜூலை 30

சென்னை நீலாங்கரையில் உள்ள ஆர்.கே. கன்வென்ஷன் சென்டரில் 'தூய வணக்கம்' என்ற தலைப்பில் 6 நாள் மாநாடு நடைபெறுகிறது. முதல் மாநாடு ஆகஸ்ட் 1ந் தேதி முதல் 3ந் தேதி வரையும், அடுத்த மாநாடு 8ந் தேதி முதல் 10ந் தேதி வரையும் நடைபெறுகிறது.

பொதுமக்கள் கலந்துகொள்ளும் வகையில் வருஷா வருஷம் ''யெகோவாவின் சாட்சிகள்'' இலவசமாக இந்த நிகழ்ச்சியை நடத்துகிறார்கள்.

உலகம் முழுவதும் கட்டணம் வசூலிக்காமல் இலவசமாக மாநாடுகளை நடத்தும் மிகப்பெரிய அமைப்புகளில் யேகோவாவின் சாட்சிகளின் அமைப்பும் ஒன்று. இம்மாநாட்டுக்கு கிட்டத்தட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வருவார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இது குறித்து ஜெயக்குமார் பெர்னாண்டோ பேசுகையில், (யேகோவாவின் சாட்சிகளின் உள்ளூர் செய்தி தொடர்பாளர்) தூய வண்ணம் என்ற மாநாட்டில் பைபிள் சார்ந்த வீடியோக்கள், பேச்சுக்கள், பேட்டிகள் இருக்கும்.

இயேசு வாழ்ந்த தேசம் செொல்லித்தரும் பாடங்கள், தூய வணக்கத்தை நேசித்தவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுங்கள், ஏசுவின் வார்த்தைகள் சொல்லித்தரும் பாடங்கள் ஆகியவை விளக்கப்படும் என்றார். ''இயேசுவின் வாழ்க்கை ஒரு வரலாறு'' வீடியோ தொடரின் 2ம் எபிசோடுக்காக நிறைய பேர் ஆவலாக காத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த 18 தொடர்களைக் கொண்ட வீடியோ, ஏசுவின் வாழ்க்கை, அவர் செய்த ஊழியம் பற்றி சுவிஷேச புத்தகங்கள் சொல்வதைத் தத்ரூபமாக காட்டியுள்ளது என்றும் கூறினார்.

கடந்த ஆண்ட கிட்டத்தட்ட 6 ஆயிரத்துக்கும் அதிகமான 3 நாள் மாநாடுகள் உலகம் முழுவதும் நடத்தப்பட்டன. அதில் சுமார் 1 கோடியே 10 லட்சம் பேர் கலந்து கொண்டனர். இன்னும் அதிகமாக தெரிந்துகொள்ள மற்றும் இம்மாநாடு நடக்கும் இடத்தைப் பற்றி தெரிந்துகொள்ள jw.org வெப்சைட்டில் ''எங்களைப் பற்றி'' என்ற பகுதியில் மாநாடுகள் என்ற தலைப்பில் பார்க்கலாம் என்றும் கூறினார்.

சிதம்பரம் டெம்பிள் டவுன் ரோட்டரி சங்க புதிய நிர்வாகிகள் பதவியேற்பு

சிதம்பரம், ஜூலை 30

சிதம்பரம் டெம்பிள் டவுன் ரோட்டரி சங்கத்தின் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா நடைபெற்றது.

புதிய தலைவராக பூபாலன், செயலாளராக ராமநாதன், பொருளாளராக நீலகண்டன் ஆகியோர் பதவி ஏற்றனர். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக முன்னாள் மாவட்ட ஆளுநர் செங்குட்டுவன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

உதவி ஆளுநர் புகழேந்தி தலைமை ஏற்றார். நிகழ்ச்சியில் ஒரு மாணவிக்கு சைக்கிளும், ஒரு பெண்ணுக்கு சலவை பெட்டியும் வழங்கப்பட்டன.

சங்கத்தின் முன்னாள் தலைவர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக அறிவியல் புல முதன்மையர் பேராசிரியர் ச. ஸ்ரீராம் அனைவரையும் வரவேற்றார். உதவி ஆளுநர்கள் எழில்சிவா, ஹிமாயத் அலி, ஜேம்ஸ் வில்லியம்ஸ், அண்ணாதுரை, பாலமுருகன், முன்னாள் உதவி ஆளுநர்கள் முஹம்மது யாசின், நடனசபாபதி, தீபக்குமார், சுனில்குமார், திருஞான சம்பந்தன் மற்றும் அனைத்து ரோட்டரி சங்கங்களின் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், மற்றும் பலர் கலந்து கொண்டனர். சங்க செயலாளர் ராமநாதன் நன்றி கூறினார்.

விவ்ரிடி கேபிடல் லிமிடெட்

(CIN - U65929TN2017PLC117196)

பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஜக்ரியா மெட்ரோபாலிட்டன், எண். 200/1-8, 2வது தளம், பிளாக் -1, அண்ணா சாலை, சென்னை - 600002.

30 ஜுன், 2025 அன்றுடன் முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகள்

[செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015-ன் விதி 52 (8) மற்றும் 52 (4)]

(ரூபாய் லட்சங்களில்)

வ. எண்	விவரங்கள்	ஜுன் 30, 2025ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது)	ஜுன் 30, 2024ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது)	மார்ச் 31, 2025ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது)
1	செயல்பாடுகளில் இருந்து மொத்த வருமானம்	35,913.11	32,087.41	1,34,711.18
2	காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்)	6,321.27	7,374.91	29,063.38
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்)	6,321.27	7,374.91	29,063.38
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்)	4,709.35	5,516.85	22,004.08
5	காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது	4,741.79	5,562.88	22,597.22
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம்	1,807.18	1,774.41	1,804.08
7	ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக)	76,817.45	53,181.60	71,863.51
8	பங்கு பிரீமியம் கணக்கு	1,31,958.76	1,31,429.10	1,31,929.82
9	நிகர மதிப்பு	2,19,677.41	1,95,479.14	2,14,691.43
10	செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை	7,71,167.89	6,53,683.19	8,01,114.58
11	நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள்	-	-	-
12	கடன் பங்கு விகிதம்	3.42	3.16	3.48
13	ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்)	ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை	ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை	ஆண்டு விகிதம் செய்யப்பட்டது
	1. அடிப்படை	4.90	5.76	22.91
	2. டைலூட்டட்	4.82	5.60	22.50
14	மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு	Nil	Nil	Nil
15	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	Nil	Nil	Nil
16	கடன் சேவை கவரேஜ் விகிதம்	NA	NA	NA
17	வட்டி சேவை கவரேஜ் விகிதம்	NA	NA	NA

குறிப்பு :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015-ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்ஸ்சேஞ் போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 52(8) மற்றும் 52(4)-ன் கீழ் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜுன் 30, 2025-ம் காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (URL.www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளமான (www.vivriticapital.com /investors.html) - ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52 (4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்ஸ்சேஞ் (பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com) ல் அணுகலாம்.

விவ்ரிடி கேபிடல் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN 06848801

இடம் : சென்னை
தேதி : 28-07-2025

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி கலை நிகழ்வு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருது

விழுப்புரம், ஜூலை 30

தெய்வனை அம்மாள் மகளிர் கல்லூரியின் கலையரங்கில் துறைகளுக்கு இடையேயான கலை நிகழ்வு நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் சி. அகிலா தலைமை தாங்கி பேசுகையில், மாணவியர்களின் தனித்திறன்களை வளர்த்தலின் முக்கியத்துவம், கல்வியுடன் மாணவியர்கள் கலைச்சார்ந்த செயல்பாடுகளில் ஆர்வத்தினை வளர்த்துக்கொள்ளுதலின் முக்கியத்துவம் ஆகியவை குறித்து விரிவாக விவரித்தார்.

இந்நிகழ்வில் மாணவியர்களின் தனித்திறனை வளர்க்கும் வகையில் தனிநபர் நடனம், குழு நடனம், தனிநபர் பாடல், ஆடை அலங்கார அணிவகுப்பு, நெருப்பில்லா சமையல்,பானை ஓவியம், மணப்பெண் அலங்காரம் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கு கல்லூரியின் முதல்வர் விருது மற்றும் சான்றிதழ் அளித்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வின் வரவேற்புரையினை கலைமன்ற ஒருங்கிணைப்பாளர் மற்றும் கணினி அறிவியல் துறை பேராசிரியை கலைவாணி ஆற்றினார். மாணவியர் புல முதன்மையர் மற்றும் துறைச்சார்ந்த பேராசிரியப்பெருமக்கள் பங்கேற்று மாணவியர்களை ஊக்கப்படுத்தினர். கலைமன்ற செயலர் பிரியதர்ஷினி நன்றியுரையாற்றினார்.

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு 2½ கிலோ தங்க சங்கு, சக்கரம் காணிக்கை

திருமலை, ஜூலை.30

திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு நேற்று சென்னையை சேர்ந்த ஒரு தனியார் நிறுவனம் ரூ.2 கோடியே 40 லட்சம் மதிப்பிலான சுமார் 2½ கிலோ எடையுள்ள தங்க சங்கு, சக்கரத்தை காணிக்கையாக வழங்கியது.

அதனை திருமலை கோவிலில் உள்ள ரங்கநாயக்குலா மண்டபத்தில் தேவஸ்தான கூடுதல் தலைமை நிர்வாக அதிகாரி வெங்கையா சவுத்ரி பெற்று கொண்டார்.

This is only an advertisement for information purposes and not for publication, distribution, or release directly or indirectly in the United States of America or otherwise outside India. This is not an announcement for the Offer Document. All capitalized terms used and not defined herein shall have the meaning assigned to them in the Letter of Offer dated April 09, 2025 (the "**Letter of Offer**" or "**LOF**) filed with the BSE Limited ("**BSE**") (hereinafter referred to as the "**Stock Exchange**").

Garment Mantra Lifestyle Limited

Registered Office: No.15, Murthy's Plaza, Kariagounder street, Khaderpet, Tirupur – 641601, Tamil Nadu, India
Contact person: Mrs. Lakshmi Priya. K, Company Secretary & Compliance Officer
Telephone: +91 422 4333896 | **E-mail id:** accounts@junctionfabrics.in | **Website:** www.garmentmantra.com
Corporate Identity Number: L18101TZ2011PLC017586

FOR THE ATTENTION OF SHAREHOLDERS OF PARTLY PAID-UP EQUITY SHARES

CORRIGENDUM TO THE FIRST CALL NOTICE TO THE HOLDERS OF PARTLY PAID-UP EQUITY SHARES (ISIN- IN9653S01018) OF GARMENT MANTRA LIFESTYLE LIMITED ("COMPANY") HELD AS ON THE RECORD DATE i.e., FRIDAY, JULY 11, 2025

1. The Company has completed the dispatch of First Call Notice to the shareholders of party paid-up equity shares, whose names appeared on the Register of Members as on the record date i.e., Friday, July 11, 2025 ("First Call Record Date") for making the payment of First Call money of ₹ 0.30 per share (comprising ₹ 0.25 towards paid-up per share and ₹ 0.05 towards premium) per partly paid-up Equity Shares.
2. Pursuant to this Corrigendum to the First Call Notice ("**Corrigendum**"), the period for payment of money for the First Call shall now commence from Monday, August 4, 2025 [instead of Monday, July 28, 2025] and shall continue until Thursday, Monday August 18, 2025 [instead of Wednesday, August 06, 2025]. You are accordingly requested to make the payment of money for the First Call between Monday, August 4, 2025 and Monday, August 18, 2025 (both days inclusive).
3. The First Call Notice and this Corrigendum, along with detailed instructions, ASBA application form and payment slip can be downloaded from the Company's website at https://www.garmentmantra.com/investors/ and on the website of Bigshare Services Pvt Ltd ("**RTA**") at https://www.bigshareonline.com/ or from the website of the Stock Exchanges.
4. The payment of First Call money can be made by choosing any one of the following modes:

Modes of Payment		
	a) Online ASBA	Through the website of the SCSBs[1]
	b) Physical ASBA	By submitting physical application to the Designated Branch of SCSBs[1]
	c) Online	Using the 3-in-1 online trading-demat-bank account whenever offered by brokers

Please visit https://www.sebi.gov.in/sebiweb/other/OtherAction.do?doRecognisedFpi=yes&intmId=35 to refer to the list of existing SCSBs [Self-Certified Syndicate Banks]

1. Please note that the trading of ₹ 0.25 partly paid-up equity shares of the Company (ISIN: INE653S20010) has been suspended on the Stock Exchange with effect from Friday, July 11, 2025 on account of the First Call. Trading of ₹ 0.50 partly paid-up equity shares of the Company under a new ISIN: IN9653S01026 is expected to commence within a period of 3 weeks from the last date i.e., Monday, August 18, 2025 for making the payment of First Call.
2. Please also note the consequences of failure to pay First Call Money is given below:
   (a) Interest @ 10.00 % (Ten per cent only) p.a. will be payable for delay in payment of First Call beyond Monday, August 18, 2025 till the actual date of payment;
   (b) The Company shall be entitled to deduct from any future dividend payable to you, all sums of money outstanding on account of calls and interest; due thereon in relation to the partly paid-up equity shares of the Company; and
   (c) The partly paid-up equity shares of the Company currently held by you, including the amount already paid thereon may be liable to be forfeited on failure to pay the first call, in accordance with the Articles of Association of the Company and the Letter of Offer.
3. **Eligible Shareholders may also note that:**
   (a) FAQ's on First Call are available on the website of the Company https://www.garmentmantra.com/investors/ and on the website of Bigshare Services Pvt Ltd ("**RTA**") at https://www.bigshareonline.com/ .
   (b) You may also seek clarification on any query related to the payment of First Call on +91 22 6263 8200 (operational from Monday to Friday from 9 AM to 5 PM).
   (c) All correspondence in this regard may be sent to RTA at below mentioned address/ email address:
   Bigshare Services Private Limited
   Registered and Corporate Office*: Office No S6-2, 6th floor Pinnacle Business Park, Next to Ahura Centre, Mahakali Caves Road, Andheri (East) Mumbai - 400093, India*
   Contact Person: *Suraj Gupta*
   E-mail: *rightsissue@bigshareonline.com*
   Investor grievance email*: inverstor@bigshareonline.com*
   SEBI Registration No.*: MB/INR000001385*

All Capitalized terms not defined herein would have the same meaning as attributed to in the Letter of Offer.

For Garment Mantra Lifestyle Limited
Lakshmi Priya. K
Company Secretary and Compliance Officer
Membership No: A36135

Date : 29.07.2025
Place : Tirupur

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர், தாம்பரம்

ந.க.எண்.02803 / 2025 / அ7

B.செல்வி க/பெ. பாலசுந்தரம் எண்.36/8A, விவேகானந்தர் தெரு, இரும்புலியூர் கிராமம், மேற்கு தாம்பரம், சென்னை - 600045. ...மனுதாரர்

மனுதாரர் தன் கணவர் K . பாலசுந்தரம் த/பெ.கன்னியப்பன், 36/8A, விவேகானந்தர் தெரு, இரும்புலியூர் கிராமம், மேற்கு தாம்பரம், சென்னை - 600045 என்கிற விலாசத்தில் 29.12.2019 தேதியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவுச் செய்ய தவறியதால் தற்போது மேற்படி இறப்பினை பதிவுச் செய்து கொள்ளுமாறு எதிர்மனுதாரருக்கு உத்திரவிடக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவின் பேரில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்கள் ஆட்சேபனையை வரும் 15 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்தில் நேரில் அல்லது வழக்கறிஞர் மூலமாக ஆஜராகித் தெரிவித்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

B.செல்வி
மனுதாரர்

பொது அறிவிப்பு

இதனால் பொது மக்களுக்கு அறிவிப்பது என்னவெனில் எனது கட்சிக்காரர்களான (1) திரு. ஹபீப் முஹமது சித்திக் மற்றும் (2) திரு. அஹமது மொய்தீன் ஆகிய இருவரும், கீழே சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதும், திருக்கழுக்குன்றம் சார்பதிவு அலுவலகத்தில் பதியப்பட்ட ஆவண எண். 9255/2024 மற்றும் 9257/2024 மூலம் உரிமை பட்டாதுமான சொத்தை அதன் உரிமையாளரான, சென்னை - 600002, அண்ணா சாலை, வாலாஜா ரோடு, எண்.77-ல் வசிக்கும், திரு. குலசேகரன் அவர்களின் மகன் திரு. பார்த்திபன் அவர்களிடமிருந்து கிரயம் பெற உத்தேசித்துள்ளதால், இது சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சபனையோ உரிமைகோரலோ இருக்குமேயானால் இந்த அறிவிப்பு வெளியான 7 தினங்களுக்குள் கீழ்கண்ட எனது முகவரிக்கு எழுத்து மூலமாக தக்க ஆதாரங்களுடன் தெரிவிக்க இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது. தவறும் பட்சத்தில் அவ்வாறு யாருக்கும் எந்த ஆட்சபனையோ உரிமை கோரலோ இல்லையென கருதுவதோடு, பிற்காலத்தில் எழுப்பப்படும் எந்தவிதமான உரிமைகோரலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

சொத்து விவரம்

செங்கல்பட்டு பதிவு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சார்பதிவு அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், எண்.77, குடிபெரும்பாக்கம் கிராமம், சர்வே எண். 45/3, புதிய சர்வே எண். 45/3A2 & 45/3A3, பட்டா எண். 1391-ல் உட்பட்டதும், மொத்த விஸ்தீரணம் 8682 சதுர அடி பரப்பளவு உள்ளதுமான மனை எண்கள், 6, 7, 8 மற்றும் 15-ல் அடங்கிய காலி மனைகள்.

H.முகம்மது பாரூக்,
வழக்கறிஞர்,
எண். 321(பழைய எண்.155) 2வது தளம்
தம்பு செட்டி தெரு, சென்னை - 600 001.

APTUS® ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் பைனான்ஸ் இந்தியா லிமிடெட்

CIN: L65922TN2009PLC073881

பதிவு அலுவலகம் : எண். 8B, தோஷி டவர்ஸ், 8வது தளம், 205, பூந்தமல்லி நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை 600010. தொலைபேசி : 044 45650000 இமெயில் : cs@aptusindia.com வலைதளம் : www.aptusindia.com

16வது வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் தொலைதூர மின் வாக்களிப்பு பற்றிய அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013 (''சட்டம்'') மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015 (''செபி விதிகள்'') மற்றும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (''எம்சிஏ'') மற்றும் செக்யூரிட்டிஸ் அண்ட் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவினால் வெளியிடப்பட்ட தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி, வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்கள் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்ள, **ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் பைனான்ஸ் இந்தியா லிமிடெட்டின்** (''நிறுவனம்'') உறுப்பினர்களுக்கான **16வது வருடாந்திர பொதுக் கூட்டம்** ("AGM") காணொலி காட்சி ("VC") / பிற ஆடியோ விஷுவல் காட்சி முறையில் ("OAVM") நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் உறுப்பினர்களின் நேரடி வருகை இல்லாமல் **வியாழக்கிழமை, 21 ஆகஸ்ட், 2025 அன்று இந்திய நேரப்படி காலை 11.00 மணிக்கு** நடைபெறும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 2024-25ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையுடன் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு, நிறுவனம் / டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகள் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ஜுலை 29, 2025 அன்று மின்னணு முறையில் மட்டுமே அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி, இதுவரை தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத அல்லது புதுப்பிக்காத பங்குதாரர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியை தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளத்தில் அதாவது www.aptusindia.com மற்றும் கேபின் டெக்னாலஜிஸ் லிமிடெட் (''ஆர்டிஏ'') இணையதளம் அதாவது www.kfintech.com மற்றும் பங்குச் சந்தைகளின் இணையதளம் BSE லிமிடெட்டின் www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆஃப் இந்தியா லிமிடெட்டின் www.nseindia.com-லும் கிடைக்கும் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 108, அவ்வப்போது திருத்தப்பட்ட நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்), விதிகள், 2014, விதி 20 மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள், 2015, விதி 44க்கு இணங்க, நேஷனல் செக்யூரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) வழங்கிய மின்-வாக்களிப்பு முறையை (e-voting) பயன்படுத்தி வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் உறுப்பினர்கள் வாக்களிக்க வசதி செய்யப்பட்டுள்ளது மற்றும் **வியாழக்கிழமை, ஆகஸ்ட் 14, 2025** (கட்ஆஃப் தேதி) அன்று வைத்துள்ள நிறுவனத்தின் பங்குகளின் விகிதத்தில் உறுப்பினர்களின் வாக்களிப்பு இருக்கும். வாக்குப்பதிவு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்கு ஆய்வு செய்பவராக திரு.எஸ்.சந்தீப், நிர்வாகப் பங்குதாரர், M/s. எஸ்.சந்தீப் & அசோசியேட்ஸ், பயிற்சி நிறுவனச் செயலாளர்கள் (உறுப்பினர் எண். 5853 மற்றும் சிஓபி எண். 5987) அவர்களை நிறுவனம் நியமனம் செய்துள்ளது. வருடாந்திர பொதுக்கூட்டம் முடிவடைந்த இரண்டு வேலை நாட்களுக்குள் மின்-வாக்களிப்பு முடிவுகள் அறிவிக்கப்படும் என்பதை உறுப்பினர்கள் தயவுசெய்து கவனத்தில் கொள்ள வேண்டும்.

- தொலைதூர மின்-வாக்களிப்பு காலம் **திங்கட்கிழமை, ஆகஸ்ட் 18, 2025 அன்று இந்திய நேரப்படி காலை 09.00 மணிக்குத் தொடங்கும் மற்றும் புதன்கிழமை, ஆகஸ்ட் 20, 2025 அன்று இந்திய நேரப்படி மாலை 05.00 மணிக்கு முடியும்.** இந்த காலகட்டத்தில், உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். அதன் பிறகு தொலைதூர மின்-வாக்களிப்பு தொகுதி நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்டினால் (NSDL) முடக்கப்படும்.
- VC / OAVM வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, தொலைதூர மின்-வாக்களிப்பு மூலம் தீர்மானத்தின் மீது வாக்களிக்காத உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்-வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- வருடாந்திர பொதுக்கூட்டத்துக்கு முன்னதாக தொலைதூர மின்-வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC / OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் / பங்கேற்கலாம். ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள்.
- அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு, நிறுவனத்தின் பங்குகளைப் பெற்று, நிறுவனத்தின் உறுப்பினராகி, கட்ஆஃப் தேதியில் பங்குகளை வைத்திருக்கும் எவரும், evoting@nsdl.comல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம், உள்நுழைவு-ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம் அல்லது www.evoting.nsdl.comஐப் பார்வையிடலாம் அல்லது 022 – 4886 7000 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

காணொலி காட்சி மூலம் கூட்டத்தில் பங்கேற்கவும், தொழில்நுட்ப உதவி தேவைப்படும் உறுப்பினர்கள் திருமதி. பல்லவி மாத்ரே, மூத்த மேலாளர், நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட், 301, 3வது தளம், நமன் சேம்பர்ஸ், பிளாட் C-32, G-பிளாக், பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா கிழக்கு, மும்பை, மகாராஷ்டிரா – 400051 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண். 022 – 4886 7000, மின்னஞ்சல் முகவரி : evoting@nsdl.com

ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் பைனான்ஸ் இந்தியா லிமிடெட்
ஒப்பம்/-
சனின் பணிக்கர்
நிறுவனச் செயலாளர் & இணக்க அதிகாரி

இடம் : சென்னை
தேதி : ஜூலை 29, 2025